*1973 ஏப்ரல் 3]*

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அண்மையில் டெல்லியிலே தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டிலே அந்த விகிதாச்சாரத்தை உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரப்பூர்வமாக நமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

**திரு. க. துரைசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபொழுது எட்டில் 7 பங்கும், எட்டில் 1 பங்கும் என்ற விகிதாச்சாரத்திலே பணம் ஒதுக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். மீதமென்று அதிகமான செலவை மாநில அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருப்பதாகத் தெரிவித்தார்கள். மாநில அரசுப் பொறுப்பேற்கிற அதே நேரத்திலே மத்திய அரசும் ஏன் பங்கு கொடுக்கக்கூடாது? மத்திய அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து ஒதுக்கவேண்டுமென்று வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன்:** ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் இதை எடுத்துக் கூறியிருக்கிறேன். அநேகமாக நம்முடைய வேண்டுகோளுக்கும், எண்ணத்திற்கும் ஏற்ப பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

### பழனிக்கருகில் கிடைக்கும் "மொலிப்டினம்"

■ 619 வினா—**புலவர் சி. பழனிச்சாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் 1971-ம் வருடம் டிசம்பர் 9-ம் தேதியன்று வினா எண் 202-க்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள காடிக்கூட்டம் என்னும் சிற்றூருக்கருகில் மத்திய அரசின்மூலம் மொலிப்டினம் என்னும் மூலப்பொருள் அகழ்ந்தெடுக்கும் பணி இதுவரை எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்திய நிலவியல் ஆய்வுக்கழகம் காடிக்கூட்டம் என்னும் சிற்றூரைச் சுற்றிலும் இதுவரையில் 5433.19 மீட்டர் நிலத்தில் துளையிடும் பணியை மும்முரமாக மேற்கொண்டுள்ளது. இப்பகுதிகளில் அதிக அளவு 60 மீட்டர் ஆழம்வரை மொலிப்டினம் கனிப்பொருள் 36,360 டன் படிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்த விரிவான அறிக்கை ஒன்று இந்திய நிலவியல் ஆய்வுக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**புலவர் சி. பழனிச்சாமி:** இப்படி அகழ்ந்தெடுக்கப்படுகிற மூலப்பொருளைப் பயன்படுத்தி பழனிப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை அமைக்க நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அவர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அந்த மூலப்பொருளில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வேண்டுமென வற்புறுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆராய்ச்சி முடிந்ததற்குப் பின்னுல் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** இந்தக் கரடிக் கூட்டத்திற்கு மத்தியில் தைரியமாகச் செல்லத் துணிந்தவர்கள் மத்திய அரசாங்கமா அல்லது மாநில அரசாங்கமா? அந்த மொலிப்டினம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கரடிக் கூட்டம் என்பது ஊர் பெயர். அங்கு கரடி கிடையாது. மொலிப்டினத்தைக்கொண்டு Molybdenum steel is widely used in air crafts, automobiles, shafts, high speed vehicles, pumps, gears, guns, armour plates, etc., ஆகியவற்றையெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்று ஆராயப்பட்டிருக்கிறது.

*Tamil Nadu Cements, Alangulam*

* 620 *Q*.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons working in the Packing Department in Tamil Nadu Cements, Alangulam; and

(*b*) whether they are working under the Department or under Contractors?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ)** சிமெண்ட் மூட்டைக் கட்டும் வேலை, தொழிற்சாலையைச் சேர்ந்த 58 தொழிலாளர்களால் செய்யப்படுகிறது. சிமெண்ட் மூட்டைகளை வாகனங்களில் ஏற்றுதலும், கோணிப்பைகளில் முத்திரையைப் பொறித்தலும் 20 ஆட்கள்மூலம் ஒபந்தக்காரரால் செய்யப்படுகின்றன.

**திரு. க. சுப்பு :** ஒப்பந்தக்காரர்களின்கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு வேலை இருப்பது, இல்லாமல் விடப்படுவது என்ற நிலைமையில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிருர்கள். ஒப்பந்தம் முறையை ரத்து செய்து அவர்களையும் துறையின் ஊழியர்களாகப் போட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதைக்கு இப்படி யோசனை இல்லை. இதிலே இரண்டு பகுதியாக வேலை செய்யப்படுகிறது. முதல் பகுதி தொழிற்சாலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள். கடைசியில் லோட் செய்யும்போது தனியாக ஒப்பந்தக்காரரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் பரிசிலனை செய்யப்பட்டு முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும்.